**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 393/2023**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.நிர்மல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராஜன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 25.03.2026.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2023ம் தேதி, காலை 10.20 மணியளவில் பணியில் இருந்தபோது 59 வயது மதிக்கத்தக்க நெல்லையப்பன் என்பவரை அவரது மகள் ரேணுகாதேவி என்பவர் என்னிடம் மேல்சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் ஆய்க்குடி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற விபத்து பதிவேட்டுடன் என்னிடம் மேல்சிகிச்சைக்கு ஆஜரானார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, வயிற்று பகுதியில் கட்டு போடப்பட்டிருந்தது. அவரிடம் உள்நோயாளியாக சிகிச்சை எடுக்க வேண்டும் என்று சொன்னபோது, அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். எனவே, என்னால் காயத்தின் தன்மை குறித்து கருத்துரு கூற இயலவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.9 விபத்து பதிவேடு நான் வழங்கியது தான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

வயிற்றின் தோலின் தடிமன் 3 முதல் 4 இன்ச் இருக்கும் என்றால் சரிதான். ஆனால் பருமனாக இருப்பவர்களுக்கு கூடுதலாக இருக்கும். ஒரு நபர் கீழே விழும்போது வயிற்று பகுதியில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.28 11:23:42 +0530